தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு

# திணை

Bulletin of Tamil Heritage Foundation *international* - THFi

**ஏப்ரல் மாதம் 2021**
**மடல் 11**

பொறுப்பாசிரியர்:
குமரன் சுப்ரமணியன் (ஜெர்மனி)

websites : http://www.tamilheritage.org

https://academy.tamilheritage.org/

Mobile App : Tamil Heritage Foundation

Google Groups : Mintamil Google Group

facebook :
Tamil Heritage Foundation
THF Student Heritage Network
Tamil Heritage Foundation
Research - Korea and India
Der Kural Des Thiruvalluvar
Subashini THF

youtube:
https://www.youtube.com/thfichannel

E-mail: mythforg@gmail.com

THFi - HQ : Germany
Branches : India, Srilanka, Malaysia, Denmark, Norway, France, USA.

மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

*(அதிகாரம்: மருந்து– குறள் 945)*



அனைவரையும் தமிழ் மரபு அறக்கட்டளையின் 'திணை' மாதாந்திர செய்தி மடலின் வழியாகச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஏப்ரல் மாத தமிழ் மரபு அறக்கட்டளை நிகழ்ச்சிகள் பல்வேறு ஆய்வுப் புலங்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தது. திசைக் கூடல் நிகழ்ச்சியில் நாட்டுப்புறக்கலைகள் பற்றிய ஒரு ஆய்வு நிகழ்ச்சி ஏப்ரல் மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையை அலங்கரித்தது.

நூல்களைப் போற்றுவோம் என்பது தமிழ் மரபு அறக்கட்டளையின் அடிப்படைக் கொள்கை. அந்த வகையில் "உடுமலை வரலாறு" என்ற நூல் பற்றிய விரிவான செய்திகளைக் கலந்துரையாடும் வகையில் இணையவழி கருத்தரங்கு ஒன்றினைத் தமிழ் மரபு அறக்கட்டளை ஏப்ரல் மாதம் 11 ஆம் தேதி ஏற்பாடு செய்திருந்தது. உடுமலை வரலாற்று ஆய்வு நடுவத்தைச் சார்ந்த அறிஞர்கள் இந்த நிகழ்ச்சியில் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் வகையில் இந்தக் கருத்தரங்கம் சிறப்பாக அமைந்திருந்தது.




இவ்வாண்டு உலக மரபு நாள் கொண்டாட்டம் ஏப்ரல் 18ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டது. வரலாற்று ஆய்வுகளில் முழு கவனம் செலுத்தி இயங்கிக்கொண்டிருக்கும் தமிழ் மரபு அறக்கட்டளை ஏப்ரல் 17ஆம் தேதி "அருங்காட்சியகம் – நேற்று இன்று நாளை" என்ற தலைப்பில் ஒரு சிறப்புக் கருத்தரங்கம் ஒன்றை ஏற்பாடு செய்து நிகழ்த்தியது. இதற்குத் தமிழக அரசின் அருங்காட்சியக ஆணையர் முனைவர் சண்முகம் இ.ஆ.ப. அவர்கள் தலைமை தாங்கி நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றினார். தமிழகச் சூழலில் அருங்காட்சியங்கள் மேம்படுத்தபட வேண்டியதன் அவசியம் பற்றி பொதுவாக இந்த நிகழ்ச்சியில் கலந்துரையாடப்பட்டது.




2014ம் ஆண்டு தொடங்கி ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு இடையே வெளிவரும் தமிழ் மரபு அறக்கட்டளையின் மின் தமிழ் மேடை காலாண்டு ஆய்விதழின் 25 ஆவது இதழ் இம்மாதம் வெளியிடப்பட்டது. இந்த ஆய்விதழுக்குப் பங்களித்து வரும் ஏராளமான ஆய்வறிஞர்களையும் எழுத்தாளர்களையும் தமிழ் மரபு அறக்கட்டளை நன்றியுடன் நினைவு கூர்கிறது.




தமிழ் மரபு அறக்கட்டளை முன்னெடுக்கும் வரலாற்றுப் பாதுகாப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளில் நீங்களும் இணைவீர். தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு உங்களை அன்புடன் வரவேற்கின்றது.

தமிழால் இணைவோம்!

**அன்புடன்**
**முனைவர் க.சுபாஷிணி**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

# தமிழ் மரபு அறக்கட்டளையின் 2021 ஏப்ரல் மாத நிகழ்வுகள்

## திசைக் கூடல் – வாராந்திர உரை நிகழ்ச்சி

| தேதி | நேரம் | கிழமை | உரையாளர் | உரை தலைப்பு |
|---|---|---|---|---|
| 04/4/2021 | 8:00 PM | ஞாயிறு | பேராசிரியர் காவ்யா சண்முகசுந்தரம் | நாட்டுப்புறக் கலைகள்: ஓர் பன்முகப் பார்வை<br>https://youtu.be/kp4qUiDYv1I |
| 11/4/2021 | 8:00 PM | ஞாயிறு | இணைய வழி கருத்தரங்கு | உடுமலை வரலாறு நூல் – இணைய வழி கருத்தரங்கு<br>https://youtu.be/ZeMMMyAqNkE |
| 17/4/2021 | 4:00 PM | ஞாயிறு | கருத்துரை மற்றும் கலந்துரையாடல் | அருங்காட்சியகம்: நேற்று இன்று நாளை<br>https://youtu.be/fnTIxpP7mjA |
| 25/4/2021 | 8:00 PM | ஞாயிறு | எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் தோழர் ச. சுப்பாராவ் | வாசிப்பு வசப்படும் – கருத்துரை & கலந்துரையாடல்<br>(உலக நூல்கள் நாள் – சிறப்பு நிகழ்ச்சி)<br>https://youtu.be/TPZKPMx_pJI |

# திசைக் கூடல் – வாராந்திர உரை நிகழ்ச்சி

## நாட்டுப்புறக் கலைகள்: ஓர் பன்முகப் பார்வை

### பேராசிரியர் காவ்யா சண்முகசுந்தரம்

**திசைக் கூடல் நிகழ்வு #202**




ஏப்ரல் – 4, 2021 – ஞாயிறு – இரவு 08:00 இந்திய நேரம்

காணொளி : https://youtu.be/kp4qUiDYv1I

# உடுமலை வரலாறு நூல் – இணைய வழி கருத்தரங்கு

**திசைக் கூடல் நிகழ்வு #203**




ஏப்ரல் – 11, 2021 – இரவு 08:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/ZeMMMyAqNkE**

# அருங்காட்சியகம் – நேற்று இன்று நாளை

## உலக மரபு நாள் சிறப்பு இணையவழி நிகழ்ச்சி

### திசைக் கூடல் நிகழ்வு #204




ஏப்ரல் – 17, 2021 – மாலை 04:00 இந்திய நேரம்

காணொளி : **https://youtu.be/fnTIxpP7mjA**

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

# வாசிப்பு வசப்படும் – கருத்துரை & கலந்துரையாடல்

**(உலக நூல்கள் நாள் – சிறப்பு நிகழ்ச்சி)**

**தோழர் ச. சுப்பாராவ்**
**எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர்**

**திசைக் கூடல் நிகழ்வு #205**




**ஏப்ரல் – 25, 2021 – இரவு 08:00 இந்திய நேரம்**

காணொளி : **https://youtu.be/TPZKPMx_pJI**




தமிழ் மரபு அறக்கட்டளையின் காலாண்டு மின்னிதழ் – மின்தமிழ்மேடை

வெளியீடு: காட்சி: 25

https://thf-news.tamilheritage.org/wp-content/uploads/2021/04/CONTENT-THFi-MinTamilMedai-25.pdf

தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு
திணை
Bulletin of Tamil Heritage Foundation international - THFi

**தமிழ் மரபு அறக்கட்டளையின் ஆய்வுப் பயணத்தில் நீங்களும் இணையுங்கள்.**

## தமிழால் இணைவோம்!

---

## தமிழ் மரபு அறக்கட்டளை

https://tamilheritage.org/

---

### தமிழ் மரபு அறக்கட்டளையின் செய்திகள்

https://thf-news.tamilheritage.org/

---

### "கடிகை" – தமிழ் மரபு முதன்மைநிலை இணையக் கல்விக் கழகம்

https://academy.tamilheritage.org/

---

### சங்கம்பீடியா

https://sangathamizh.tamilheritage.org/

---

**நல்ல சிந்தனை:**

இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து.
– நாலடியார்

**பொருள்:**
கல்வியானது, இந்தப் பிறவியின் (இம்மை) பயனைத் தரும். கல்வி பிற செல்வங்களைப் போலல்லாமல் கொடுக்கக் கொடுக்கக் குறைவு படாமல் மென்மேலும் வளரும். கல்வியுடைய ஒருவரைப் புகழ் நெடுந்தொலைவுக்கு விளக்கமுறச் செய்யும். கற்றவர் தாம் உயிர் வாழும்வரை கல்வி அழியாது நிலைபெற்றுத் தம்முடன் விளங்கும். ஆதலால் கல்வியைப் போல அறியாமை நோயை ஒழிக்கின்ற மருந்தினை நாம் எந்த உலகிலும் காணவில்லை.